குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.1392/2022**

வழக்கு சாட்சி ம.சா.2

2026ம் ஜூலை மாதம் 04–ம் நாள் எதிர்மனுதாரர்தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதிவாணன் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 04.07.2026

## குறுக்கு விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்து தான் சாட்சியம்அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அழைப்பாணையில் மசா.6 மட்டும் தான் கொண்டுவரச்சொல்லி வந்தது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் துவக்க இருப்பாக எவ்வளவு இருந்தது என்றால் ரூ.2634.15/– இருந்தது. கடைசியாக எவ்வளவு இருப்பு இருந்தது என்றால் ரூ.4861.21/– இருந்தது. முதல் விசாரணையில் 18.07.2022ம் தேதி HDFC வங்கியில் சங்கிரி கிளைக்கு வசூலுக்கு அனுப்பினோம் என்று சொல்லியுள்ளனே் அதற்கான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது மசா.6ல் ஜெயராஜ் என்ற பெயரை சுருக்கமாக Jaya என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காசோலை தொகை ரூ.8,00,000/– என்று குறிப்பிடப்பட்டுள்ளது. HDFC வங்கி என குறிப்பிட்டு மசாஆ.6ல் உள்ளதா என்றால் இல்லை. ஆதற்கான ஆவணம் தனியாக கணிணியில் உள்ளது என்றால் சரிதான். அந்த கணிணியில் உள்ள ஆவணத்தை பார்த்தால் தான் HDFC வங்கிக்கு அனுப்பியது தெரியவரும் என்றால் சரிதான். மசாஆ.3ல் எங்கள் வங்கி முத்திரையோ HDFC வங்கி முத்திரையோ கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். QR கோடுகள் இல்லை என்றால் சரிதான். QR கோடுகள் வராது மசா.3 எங்கள் கணிணியில் எடுக்கப்பட்டது தான். இந்த வழக்கு காசோலை HDFC வங்கியால் திருப்பப்பட்டது என்பதற்கு மசாஆ.3ல் இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

ரிட்டன்மெமோ கணிணியயில் எடுக்கும்போது எந்த வங்கிக்கு அனுப்பப்பட்டதோ அனுப்பப்பட்ட வங்கியின் முத்திரையோ கையொப்பமோ இருக்காது என்றால் சரிதான்.